DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">O.S :55/2022</td></tr>
<tr><td colspan="3">Deposition of Witness</td><td>:</td><td colspan="3">பி.சா. 5</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு.சண்முகம்</td><td colspan="2" rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">நகர சார் ஆய்வாளர், மாநகராட்சி, கும்பகோணம்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>மாது</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td></td><td colspan="2" rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">38</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>கும்பகோணம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 12-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.15**

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம் மாநகராட்சியில் நகர சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியமளிக்க வந்திருக்கிறேன். சம்மனில் கோரியுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். கும்பகோணம் வார்டு 3, பிளாக் 18, கும்பகோணம் மேலபேட்டை வடக்கு தெரு , நகர புல எண் 866 சோமசுந்தரம் மகன் செல்வகணபதி என்பவர் பெயரில் உள்ளது . அசல் பதிவேட்டை கொண்டு வந்திருக்கிறேன். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட அதன் நகல் **சா.சா.ஆ. 5 ஆகும்.** இது நத்தம் நிலவரி திட்டத்தில் தயார் செய்யப்பட்ட 2008 ஆம் வருடத்திற்குரிய பதிவேடு ஆகும். வா.சா.ஆ.1 இல் பக்கம் 19 இல் யார் மனுவின் பேரில் 16/08/2018 அன்று இவ்வாறு பெயர் மாறுதல் யாரால் செய்யப்பட்டது என்றால் ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்பட்டது. 2018 இல் கணினியாக்கம் செய்யும்போது, மேனுவலாக என்ன இருந்ததோ அது கணினியாக்கம் செய்யப்பட்டது . இந்த சொத்திற்கு யார் பெயரில் வரி விதிப்பு உள்ளது என்று எங்கள் பிரிவில் தெரியாது. மேற்படி வரி விதிப்பு சம்மந்தமாக சண்முகம் என்பவர் 10/01/2022 தேதியிலோ அதற்கு பின்போ வரிவிதிப்பு குறித்து ஆட்சேபனை எதுவும் தெரிவித்துள்ளாரா என்று தெரியாது . வா.சா.ஆ.1 இல் பக்கம் 18 இல் உள்ள நகல் மனு வழங்கப்பட்டது குறித்து யாரால் மனு கொடுக்கப்பட்டது என்ற விவரம் எங்கள் பிரிவில் இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சா.சா.ஆ.5 இல் 2008 இல் எழுதப்பட்டதாக குறிப்பு எதுவும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அசல் பதிவேட்டில் கடைசியில் உள்ளது. வழக்கு நகர புல எண் சோமசுந்தரம் மகன் செல்வகணபதி பெயரில் 2018 இல் பதிவு உள்ளது . என்ன அசல் ஆவணத்தின் அடிப்படையில் இவ்வாறு 2018 இல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் நகர அளவை பதிவேட்டை பார்த்து தான் அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது. நகர அளவை பதிவேடு என்பது அப்போதைய நில அளவை வட்டாட்சியரால் தயாரிக்கப்பட்டது. அது சம்மந்தமான விவரம் அவரை தான் கேட்கவேண்டும் என்றால் ஆமாம் . வழக்கு சொத்து 1957 இல் சோமசுந்தரம் மனை ராஜமணியம்மாள் பெயரில் கிரையம் வாங்கிய சொத்து அது சம்மந்தமான ஆவணங்கள் எதையும் பார்த்தேனா என்றால் எனக்கு தெரியாது . ராஜமணியம்மாளுக்கு மூன்று வாரிசுகள் இருக்கும் போது ஒருவர் பெயரில் மட்டும் மாறுதல் செய்யப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரி. இவ்வாறு பெயர் மாறுதல் செய்யும் போது மற்ற இரண்டு வாரிசுகளையும் விசாரித்ததாக ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரி.

**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**முடிக்கப்பட்ட நேரம்: 11.35**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.